# சுதந்திரன்
SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2009
ஐப்பசி 8
துல்ஹஃதா பிறை 22
புதன் (25-10-19 8)
நிருவியது 1947
புத்தகம் 32
இதழ் 42

விலை சதம் 35


# இனக்கொலை ஆட்சியின் தலைவர் ஜே ஆரை

# எம். ஜி. ஆர். வரவேற்கக்கூடாது!

## அதிமுக் பிரமுகர்கள் வலியுறுத்து!

சென்னை, அக்டோபர் 22—

தமது இந்திய விஜயத்தை மேற்கொண்டு நாளை வியாழக்கிழமை (26-10-78) சென்னைக்குப் பயணமாகும் (சிங்கள) சிறிலங்காவின் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களுக்கு தமிழ் நாட்டுத் தலைநகரில் எவ்விதமான கோலாகல வரவேற்பும் அளிக்கப்படமாட்டாதெனத் தெரிய வருகிறது. ஈழத்தமிழர்களுக்கு எதிராக ஜே, ஆர். ஆட்சி பின்பற்றி வரும் இன ஒடுக்குமுறை இன ஒழிப்புநடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும் தமிழக மக்கள் முடிவு செய்துள்ளனர்.

இதே சமயம் தமிழின ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் சிங்கள சிறிலங்காவின் தலைவருக்கு தமிழக அரசின் சார்பில் வரவேற்பு எதுவும் அளிக்கவேண்டாமென்றும், அவரை விமான நிலையத்துக்கு சென்று வரவேற்க வேண்டாமென்றும் தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எம்.ஜி. ஆர். அவர்களை அண்ணா திமுகவின் முக்கிய பிரமுகர்கள் கோரியுள்ளதாக அறியப்படுகிறது.

1974ம் ஆண்டு யாழ்ப் பாணத்தில் தமிழ் மாநாட் டுப் படுகொலை முடிந்தவுடன் சென்னை சென்ற அப் போதைய இலங்கைப் பிரதமர் திருமதி பண்டாரநாயகாவை சென்னை விமான நிலையத்தில் அன்றைய தமிழ்நாடு முதல்வர் கலைஞர் கருணாநிதி சம்பிரதாய பூர்வமாகவரவேற்ற அதேநேரத்தில், திமுக உறுப்பினராக அப்போதிருந்த உலகத்தமிழ் இளைஞர் பேரவையின் தலைவர் இரா.சனார்த்தனம் தலைமையில் கறுப்புக்கொடி எதிர்ப்பியக்கம் நடைபெற்றதும் திரு. சனார்த்தனம் கைது செய்யப்பட்டதும் தெரிந்ததே. அதே சனார்த்தனம் அவர்கள் இப்போது அ.தி.மு.க.வில் இருக்கிறார்.

கலைஞர் கருணாநிதி பிரதமர் சிறிமாவோவை வரவேற்கச்சென்றிருக்கக்கூடாதென்றும், அது இலங்கைத் தமிழர்களைக் காட்டிக் கொடுப்பதுபோல ஆகிவிடுமென்றும் அப்போது திமுகவில் இருந்த ராஜா முகம்மது, ராஜாராம், பண்ருட்டி ராமச்சந்திரன் போன்றோர் கலைஞர் கருணாநிதியிடம் ஆட்சேபம்தெரிவித்ததாகக் கூறப்பட்டது. இப்போது இவர்கள் எல்லாம் அண்ணா திமுக அரசில் அமைச்சர்களாக இருக்கின்றனர்.

தமிழரசுக் கழகத் தலைவர் சிலம்புச்செல்வர் ம. பொ. சி. அவர்களும சிறிமாவோ அம்மையாரை கருணாநிதி வரவேற்கச் சென்றதை அப்போது கண்டித்திருந்தார்.

அண்மையில் இலங்கைவந்திருந்த அமைச்சர் ராஜா

—4-ம் பக்கம் பார்க்க

## கூட்டணி பகிஷ்கரிக்கும்!

மாவட்ட அமைச்சர்கள் தொடர்பான வைபவங்கள் கூட்டங்கள் எதிலும் கலந்து கொள்வதில்லை யென்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக் குழு முடிவு செய்துள்ளது. பதில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு. சிவ சிதம்பரம் பா.உ. அவர்களின் தலைமையில் 19-10-78ல் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அறையில் நடைபெற்ற பாராளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.




# தமிழீழ முதல்வரை வரவேற்க தமிழ்நாடு தயார்!

லண்டன், ஜமேய்க்கா, அமெரிக்கா, கனடா போன்ற உலகநாடுகளில் தமிழீழ விடுதலைக்கு ஆதரவு திரட்டிக்கொண்டு தாயகம் திரும்புவதற்கு முன்னர் தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்யும் தமிழீழ முதல்வர்- தமிழினத்தலைவர்— நாவலர் அமிர்தலிங்கம் அவர்களுக்கும் திருமதி அமிர்தலிங்கம் அவர்களுக்கும் மாபெரும் எழுச்சிமிகு வரவேற்புக்களை அளிப்பதற்கு இந்தியத் தமிழ்நாடு தயாராகக் காத்திருக்கிறது: தலைவர் வரு

—4-ம் பக்கம் பார்க்க

## கோப்பாய் பா உ. சுகவீனம்

கொழும்பில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் கலந்து கொள்ள சென்றிருந்த கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை திடீரென மயக்கமுற்ற நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் தற்போது சிகிச்சை பெற்று வரும் திரு.கதிரவேற்பிள்ளை உடல் நிலை தற்போது தேறி வருகிறது.




# இராணுவ வீரர் மீது வழக்குத் தொடரப்படுமா?

மாங்குளம் புகையிரதத் துப்பாக்கிச் சூட்டு மரணம் சம்பந்தமாக விசாரணை நடத்திய முல்லைத்தீவு நீதிவான், மேற்படி மரணம் கொலையெனத் தீர்ப்பு அளித்துள்ளதைத் தொடர்ந்து சந்தேக நபரான இராணுவ வீரர் கோப்ரல் ஜெயசேகரா மீது தார்மீக அரசாங்கம் வழக்குத் தொடருமா என்று சட்டம், ஒழுங்கு நீதி இவற்றில் நம்பிக்கையுள்ள குடிமக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

புகைவண்டியில் சென்று கொண்டிருந்த மகாலிங்கம் என்பவர் மாங்குளத்தில் வைத்து துப்பாக்கிச் சூட்டினால் 28.6.1978ல் மரணமானது தொடர்பான மரண விசாரணையை முல்லைத்தீவு நீதிவான் திரு. வி.பி. சுந்தரலிங்கம் நடத்தினார். இந்த விசாரணையின் போது இறந்தவரின் சார்பாக சட்டத்தரணி மு. ஆலாலசுந்தரம் ஆஜரானார்.

மரணவிசாரணை நடைபெறும் போது சந்தேக நப

—8-ம் பக்கம் பார்க்க

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதோ ஒரு குட்டி யூ.என்.பி.

"To let the cat out of the Bag" என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு. அதாவது கோணிப்பைக்குள் மறைத்து வைத்திருந்த பூனையை வெளியே விடுவது என்று கூறுவார்கள். அப்படியொரு நிகழ்ச்சி தமிழ்ஈழ அரசியலில் அண்மையில் நடந்திருக்கிறது.

யூனியர் பொன்னம்பலம் தம்மை ' ஒரு தீவிரவாதிபோலக் காட்டிக்கொண்டு, 'குட்டி காங்கிரஸ்' கருத்தரங்குகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியை கடுமையாகத் தாக்கிப் பேசிவருதாக பத்திரிகைகளில் பெரிய அளவில் விளம்பரப்படுத்தப்பட்டுவந்தபோதிலும் — இவரும் இவரது கும்பலும் ஜே, ஆர். ஜெயவர்த்தனவின் கையாட்கள் — சிங்கள ஏகாதிபத்தியத்தின் கங்காணிகள்—ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடம் 'சபாஷ்' வாங்குவதற்காகவே கூட்டணியை திட்டிப் பேசிவருகிறார்கள் என்று நாம் சந்தேகித்தோம்.

இந்த குட்டி காங்கிரஸ், ஒரு குட்டி யூ.என்,பி. என்றும், தமிழ்ஈழப் பிரிவினைக் கொள்கையில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையீனத்தையும், தளர்ச்சியையும் ஏற்படுத்தவே இந்த ஐந்தாம்படை புறப்பட்டிருப்பதாகவும் நாம் ஐயமிட்டோம்.

நாம் ஐயப்பட்டது—சந்தேகப்பட்டது — இப்போது உறுதியாகிவிட்டது, இவர்கள் ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் கையாட்கள் — சிங்கள ஏகாதிபத்தியத்தின் நம்பிக்கைக்குரிய கங்காணிகள் — த்மிழ் ஈழத்தின் ஐந்தாம்படையினர் — உண்மையிலே குட்டி யூ.என்.பி.யினர் — என்பதை இவர்களது மேடையிலே பேசப்பட்டதாக பத்திரிகைகளில் வெளிவந்துள்ள பேச்சு ஒன்று உறுதிப்படுத்திவிட்டது. மட்டுவிலில் நடைபெற்ற திடீர் காங்கிரஸ்—அதாவது குட்டி யூ.என்.பி—கருத்தரங்கு ஒன்றுக்குத் தலைமைதாங்கிப் பேசிய அக்கட்சியின் பிரமுகர் ஒருவர்தான் கோணிப்பைக்குள்ளிலிருந்த பூனையை வெளியே விட்டிருக்கிறார்.

''25000 சதுர மைல் பரப்பைக்கொண்டதுதான் ஈழநாடு, இதில் எழுபது வீதம் சிங்களவரும் 29 விதம் தமிழரும் வாழ்கின்றனர். பரவலாக வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழரைப் பொறுத்தவரை ஐக்கிய இலங்கையே ஏற்றது. பிரிவினை கோருவது ஏற்றதில்லை. இன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசு இன ஒற்றுமையைப் பெரிதும் விரும்புகிறது. ஆனால் அதே நேரத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணியினர் தமிழரில் ஒரு பகுதியை நாடற்ற இனமாக்கிவிட்டனர் அன்று அந்நியன் ஆண்டபோது நாம் அவர்களுடன் ஒத்துவாழவில்லையா?''

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசையும் ஐக்கிய இலங்கையையும் ஆதரித்தும், தமிழீழ பிரிவினைக் கொள்கையை எதிர்த்தும்கருத்தரங்குக்குத்தலைமைதாங்கியதிரு.மு.சுப்பிரமணியம் என்ற ஆசிரியர் பேசியதாகச் செய்தி கூறுகிறது.

இதேகருத்தரங்கில் ''குட்டி யூ. என். பி. ''யின் தலைவர் திரு. சங்கரப்பிள்ளையும், செயலாளர் யூனியரும் 'கொள்கை' விளக்கம் அளித்திருக்கின்றனர்,

அவர்கள் தலைமைதாங்கிப் பேசியவரின் கருத்தை மறுக்கவுமில்லை—திருத்தவுமில்லை—கண்டிக்கவுமில்லை; அவரது கருத்தை—அதாவது ஐக்கிய இலங்கை, ஐ. தே.க. ஆதரவு, தமிழீழப் பிரிவினைக்கு எதிர்ப்பு— ஆகிய கொள்கைகளை கேட்டுக்கொண்டு அமைதியாக இருந்திருக்கின்றனர்.

தமிழினமே! அடையாளம் கண்டுகொள்! யார் இவர்கள் என்பதை அடையாளம் கண்டுகொள்! ஐந்தாம்படைப் பேர்வழிகள் மீண்டும் தலையெடுக்கிறார்கள்! எச்சரிக்கையாயிரு!

# கற்பை பறிகொடுத்த பின்பா தாலி கட்டுவது?

## ஈழவேந்தன் கேட்கிறார்!

''தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உ.க்கள் முதலில் மாவட்ட மந்திரிப்பதவிகளை ஏற்கட்டும்; அப்பதவிகளை அவர்கள் எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் — எவ்வாறு நடந்துகொள்ளுகிறார்கள் என்பதைக் கவனித்தப்பின்னரே மாகாண சுயாட்சி பற்றி சிந்திப்பேன் என்று ஜனதிபதி ஜே. ஆர். தம்மைச்சந்தித்த பேராசிரியர் ஒருவரிடம்கூறினராம்; இது எப்படியென்றால் ஒரு இளம் பெண்ணைப்பார்த்து முதலில் நீ உனது கற்பை எனக்குத் தத்தம் செய்; சில காலம் என்னேடு இசைந்து வாழ்க்கைப்படு; அதிலே எனக்குத் திருப்தி ஏற்பட்டால், பின்னர் தாலிகட்டுவது பற்றி ஆலோசிக்கிறேன் என்பதை போலாகும். தமிழர் விடுதலைக்கூட்டணி தனது அரசியல் கற்பை ஒருபோதும் இழக்காது; இழப்பதற்கு நாம் விடவும் மாட்டோம்''

—இவ்வாறு த. வி. கூ. தலைமைச் செயலகத்தில் 14 - 10 - 78 சனிக்கிழமை நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசிய த. வி. கூ. கொழும்புக்கிளைத் தலைவர் திரு. ஈழவேந்தன் கூறினர். திரு. ஈழவேந்தன் தொடர்ந்து பேசுகையில் பாராளுமன்ற உறுப்பினர்களும் இயக்கத்தைப் பொறுத்த அளவில் சாதாரண உறுப்பினர்களே என்றும் அவர்கள் இயக்கத்தின் முடிவுக்கு கட்டுப்படவேண்டுமே தவிர தமது முடிவை இயக்கத்தின் மீது பலவந்தமாக திணிக்க முடியாதென்றும் கூறினர்.

மேலும் அவர் பேசுகையில், கூட்டணியொன்றே தமிழ் மக்களின் ஒரேஇயக்கமென்றும், இதைச் சரியான பாதையிற் செலுத்த வேண்டியது தமிழ் மக்களின் கடமையென்றும் குறிப்பிட்டார்.

சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் பேசுகையில் — ''தமிழினத்துக்கு நெருக்கடி ஏற்பட்ட நேரங்களில் — தமிழர் போர்க்களத்தில் குதித்த ' வேளைகளில், இயக்கத்தையும் இனத்தையும் தலைமை தாங்கி நடத்திய மகோன்னதமான தலைவர் அமரர் இராசமாணிக்கம் அவர்களேயென்றும், உள்ளத்திலொன்றும் உதட்டிலொன்றும் பேசாது கிழக்கையும் வடக்கையும் இணைத்து வைத்த கிழக்கின்பேரொளி அமரர் இராசமாணிக்கமேயென்றும் குறிப்பிட்டார்.

வண. சிங்கராயர் அடிகளார் பேசுகையில் — 1977 பொதுத்தேர்தலுக்குப் பின்னர், விடுதலை இயக்கம் திட்டமிட்டு சீராக நடைபெறவில்லையென்றும்,இதன் காரணமாகவே மாவட்ட மந்திரிப் பதவியை ஏற்பதா அல்லவா என்ற சிக்கல்எழுந்துள்ளதென்றும், ஒரு உண்மையான விடுதலை வீரன் மாவட்டமந்திரி பதவிபற்றி கனவிற்கூட சிந்திக்க மாட்டான் என்றும் கூறினர்,

திரவியம் பேசுகையில் வெளிநாட்டில் இங்கு நடைபெறும் இனக்கொலை இன ஒடுக்கு முறைபற்றி மேலும் தீவிரமாகப் பிரசாரம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்,

# அரசாங்க சேவையில் தமிழ் ஊழியர்களின் எண்ணிக்கை பெருவீழ்ச்சி!

## திருமலைக் கருத்தரங்கில் ஐ. தி. சம்பந்தன்

''தமிழ் ஈழத்தில் பணியாற்றும் தமிழ் ஊழியர்கள் அப்பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் அளித்து விசுவாசத்துடன் உழைக்க வேண்டும். குறிப்பாக திருக்கோணமலை மாவட்டத்தில் பணியாற்றும் தமிழ் ஊழியர்களுக்கு பெரும் கடமை ஒன்று இருக்கிறது. திருகோணமலை இன்றிருக்கும் நிலையில் அப்பதியை ஆபத்திலிருந்து தப்பவைக்க தமிழ் ஊழியர்கள் மிகத் திடத்துடன் உழைக்க முன் வர வேண்டும், அம்மாவட்டத்தில் உருவாக்கப்படும் அபிவிருத்தித்திட்டங்கள் சிறந்த முறையில் செயற்பட்டு பெரும்பங்கு எடுத்து உழைக்க வேண்டும். திருகோணமலை மாவட்டத்தில் பல துறைகளிலும் சிதறுண்டிருக்கும் தமிழ் ஊழியர்கள் அனைவரையும் தொழிற்சங்க ரீதியாக ஒன்று திரட்டி கூட்டுக்கமிட்டி அமைப்பதற்கு தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி நடவடிக்கை எடுத்து வருகிறது''

இவ்வாறு தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி செயலாளர் நாயகம் ஐ. தி. சம்பந்தன் திருகோணமலை சமூக சேவை நிலையத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்,

''தமிழ் ஊழியர்களின் எதிர்காலம்'' என்னும் விடயத்தை யொட்டி நடைபெற்ற கருத்தரங்கில் தொடர்ந்து திரு, ஐ. தி' சம்பந்தன் அவர்கள் பேசுகையில்—

''சிங்களப்பகுதியில் மட்டுமன்றி தமிழ் பகுதியில் பணியாற்றும் தமிழ் ஊழியர்களின் எதிர்காலமும் ஸ்திரமற்றதாக விருக்கிறது. கடந்த இனக்கலவரத்தின் போது திருக்கோணமலை மாவட்டத்தில் பத்துக்கு மேற்பட்ட தமிழ் ஊழியர்கள் கடமையிலிருக்கும் போது கொலை செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்ஈழத்தில் அதிகரித்து வரும் சிங்களச் சிற்றூழியர்களின் நியமனங்கள் அலுவலகங்களில் பணியாற்றும் தமிழ் ஊழியர்களுக்கு பெருந்தலையிடியாக இருந்து வருகின்றது. இவர்கள் சிங்கள வகுப்புவாதிகளின் ஏஜண்டுகளாக இருந்து பொய் தகவல்களைக்கொடுத்து தமிழ் அதிகாரிகளுக்கு தலையிடிகள் கொடுத்து வருகின்றனர். சிற்றூழியர்கள் நியமனத்தில் அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கை கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

''அரசாங்க சேவையில் தமிழ் ஊழியர்கள் எண்ணிக்கை பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளது. 1956ல் இருந்து இன்றுவரையும் 65வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

இக்கருத்தரங்கில் மூன்று முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

# நிலாவெளியில் கலைமகள் விழா!

10-10-78 அன்று நிலாவெளி மத்திய நூல்நிலைய வாசகர் வட்டமும் நிலாவெளிக் கிராமாட்சிமன்ற நிர்வாகத்தினரும் இணைந்து நடாத்திய கலைமகள் விழா மிகச்சிறப்பாக நடந்தது. பல்கலைநிகழ்ச்சிகளும் சொற்பொழிவுகளும் இடம்பெற்றது. அவற்றுள் சு. செஜரெத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ''மாறிவரும் உலகில் வாலிபரின் பங்கு'' எனும் தலைப்புக்கொண்ட கவியரங்கு மிகச் சிறப்பாக இருந்தது. கவிஞர்கள், நிலவின் தாசன், து. பதுருதீன், நிலா தமிழின் தாசன், குகதாசன், கே. ஆர். டேவிட், பரமானந்தன், ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அத்தோடுமேற்படிவாசகர் வட்டத்தினரின் முன்ருவது வெளியீடான ' நிலவொளி ' சஞ்சிகையும் வெளியிடப்பட்டது. முக்கியமாக திருமலை பா. உ. இரா சம்பந்தன் அவர்கள்; விழாவில் கலந்துகொண்ட தோடு நி.கி. மன்றப்பிரதேசத்திற்கு மின்னொளியூட்டலையும் ஆரம்பித்துவைத்தார்,

# "கலாச்சாரப் புரட்சி மூலமே சாதியை ஒழிக்க முடியும்!"

## சுதந்திரன் ஆசிரியர் பேச்சு!

''தமிழினம் தலைநிமிரவும், ஒன்றுபட்டு முன்னேறவும் சமுதாயத்திலுள்ள தடைகள் அனைத்தும் வேரோடு சாய்க்கப்பட வேண்டும்; தீண்டாமையும் சாதிவேறுபாடும் தமிழனை அழித்துவரும் விஷவித்துக்களாகும்; தீண்டாமை மட்டுமன்றி, அதன் மூலவேரான சாதியும் அழிக்கப்படவேண்டும். இதற்கு ' ஒரே வழி கலாசாரப்புரட்சியே. கம்யூனிஸ்ட் சீனவில் இடம்பெற்றதுபோன்ற ஓர் கலாசாரப் புரட்சியை இங்கு நடத்துவதன் மூலமே சாதியை வேரோடு வெட்டிவீழ்த்த முடியும். இந்தப் புரட்சியை நடத்தக்கூடிய ஆற்றலும், துணிவும், இளம் மாணவ சமுதாயத்திடமேயுண்டு. இந்தச்சாதியொழிப்பு கலாசாரப்புரட்சியை மாணவர்களே முன்னின்று நடத்த வேண்டும்.''

—இவ்வாறு உரும்பிராய் இந்துக்கல்லூரி உயர்வ[illegible] மாணவர் மன்றக் கூட்டத்தில் சாதியொழிப்பும், சமுதாய மறுமலர்ச்சியும்'' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றிய சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவைமகேசன் குறிப்பிட்டார். இந்த நிகழ்ச்சி மேற்படி கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்றது. மாணவர்மன்ற செயலாளர் சிவகுமாரன் நன்றி தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு தாதிமார் பயிற்சி நிலையம்;

# கறையான்புற்றெடுக்க பாம்பு குடிகொள்ளும் கதைதானு?

கிழக்கிலங்கையில் தமிழருக்கென்று தாதிமார் பயிற்சி நிலையத்தின் தேவை நீண்டகாலமாக இருந்து வருகிறது. கிழக்கிலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இத்தேவையை அடிக்கடி எடுத்துக்கூறி வந்திருக்கிருர்கள். ஆனால் சென்ற கால அரசுகள் அவர்களின் குரல்களுக்குச் செவிசாய்க்கவில்லை, எனினும் மட்டக்களப்பு பாராளுமன்ற முதல்வர் திரு. செ. இராசதுரை அவர்களின் அயரா முயற்சியாலும் ஏனைய மட்டக்களப்பு பா. உக்களின் ஒத்துழைப்புடனும் இத்தேவையைப் பூர்த்தி செய்ய அரசு முன்வந்துள்ளது. இது பாராட்டப்பட வேண்டியதே.

இப்பயிற்சிக் கல்லூரி அரசாங்க ஆஸ்பத்திரி வளவில் நிறுவப்பட்டு வருகிறது. 104 கட்டில்களைக் கொண்ட இரண்டு மாடிக் கட்டிடங்கள் பயிற்சிநிலையமாக மாற்றப்படுகின்றன. இவை இரண்டு விரிவுரை அறைகளையும், விடுதிச்சாலையையும் அவற்றிற்கான தளபாடங்களையும் கொண்டதாக அமைகின்றது. இக்கட்டிடங்களைச் சுற்றி பெரியதொரு சுற்று மதிலும் கட்டப்படவுள்ளது. இவையனைத்தும் தற்காலிகமாக செய்யப்படும் ஏற்பாடுகள் அன்றே கூறப்படுகின்றன. இவற்றிற்கான செலவு 2 கோடி ரூபாய். இத்தொகை மட்டக்களப்பு பா.உ.க்களினது தொகுதிகளின் அபிவிருத்திக்கென புன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்ட நிதியாகும்

### மட்டக்களப்பு அரசினர் ஆஸ்பத்திரி

மட்டக்களப்பு அரசினர் ஆஸ்பத்திரி தெற்கே பொத்துவில் முதல்வடக்கே வாகரை, மூதூர் மக்களுக்குக்கூட உதவும் ஒன்ருகும். ஏற்கனவே இடம் பற்ருக்குறைவும், நெருக்கடியும் காரணமாகத்தான் இவ்விரண்டு புதுக்கட்டிடங்களும் 104 கட்டில்களைக் கொண்டதாய் கட்டப்பட்டன. அப்படியிருந்தும் வைத்திய நிபுணர்கள் இக்கட்டிடங்களைத் தாதிமாரின் பயிற்சி நிலையமாக மாற்ற உடன்பட்ட ஒரே காரணம் தமிழ் பேசும் மக்களுக்காக கிழக்கிலங்கையில் உருவாக்கப்படும் தாதிமாரின் இரண்டாவது பயிற்சி நிலையம் என்ற காரணமாகத்தான்.

ஆனல் இக்கட்டிடங்களில் நடக்கும் திருத்த வேலைகளையும் சுற்று மதிலையும் ஏனைய திட்டங்களையும் பார்க்கும்போது இவை தற்காலிக அமைப்பல்ல என்பது தெளிவாகின்றது. இப்பயிற்சி நிலையம் பற்றிய முழு உண்மையும் தங்களிடம் கூட கூறப்படவில்லையென்று வைத்திய நிபுணர்களும் வைத்திய கலாநிதிகளும் வேதனைப்படுகின்றனர்.

இது இவ்வாறிருக்கபொது மக்களும் மனம் குழம்பிய நிலையில் இருக்கின்றனர். ஏனெனில் தங்களையும், தங்கள் பா. உ.க்களையும் அரசாங்க உத்தியோகத்தர்கள் முழு உண்மையும் கூருது தவருன வழியில் இட்டுச் செல்கின்றனர் என்றே எண்ண வேண்டியுள்ளதாம்.

### தமிழருக்கு என்று ஒரே ஒரு பயிற்சி நிலையம

ஏற்கனவே சிங்கள மக்களுக்கென தாதிமாரின் பயிற்சி நிலையங்கள் ஆறு உள்ளன. தமிழ் பேசும் மக்களுக்கென்றுள்ள தாதிமார் பயிற்சி நிலையம் ஒன்றேயொன்று தான்; இதுயாழ்ப்பாணத்திலுள்ளது, ஆகவேதான் பொது மக்களும் பா. உக்களும் கிழக்கிலங்கையில் தாதிகளுக்கென்று ஒரு பயிற்சி நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று அடிக்கடி கேட்டுக்கொண்டனர். அந்த ஒரேயொரு காரணமாகத்தான் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பா. உக்களும் தங்கள் தொகுதியின் அபிவிருத்திக்கென்று ஒதுக்கப்பட்டு பண்முகப்படுத்தப்பட்ட நிதியில் 2 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்ய முன்வந்தனர்.

மட்டக்களப்பில் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இப்பயிற்சி நிலையம் தமிழ் பேசும் மக்களுக்கென்றே அரசும் உத்தரவாதம் தந்தது. அரசின் ஆஸ்பத்திரியைச்சேர்ந்த வைத்திய நிபுணர்களும் கலாநிதிகளும் உடன்பட்டதும் மேற்கூறிய காரணத்திற்காகவும் தாதிமாரின் பற்ருக்குறையை இது ஒருவாறு நிவர்த்தி செய்கிறது என்பதற்காகவுமே.

### பாரபட்சம் ஏன்?

ஆனல் இப்போது பேச்சு வேருகி விட்டது. மார்கழி மாதத்தில் 32 சிங்களத் தாதிமார்களும் இந்த நிலையத்தில் சேர்க்கப்படவுள்ளனராம். இப்பயிற்சி நிலையம் இரு மொழி பேசுவர்களுக்கும் என்று பேசப்படுகின்றது. அப்படியானல் எல்லா வாய்ப்புக்களுமுடைய ஏனைய சிங்களக் கல்லூரிகளிலும் (கொழும்பு, கண்டி, முஸ்லிம் மக்கள் பரந்து வாழும் குருநாகல் பகுதியிலுமுள்ள பயிற்சிக் கல்லூரியிலாவது) தமிழ் தாதிமார்களுக்கு இடம் கொடுத்தாலென்ன? பின் மட்டக்களப்புக்கு மாத்திரம் ஏன் இந்த பாரபட்சம்?

### ஐந்து சிங்களத் தாதிகளின் பயிற்சி நிலையம்.

அரசு பதுளையில் சிங்களத் தாதிமார்களுக்கென்று ஆருவது பயிற்சி நிலையத்தை அமைத்தது தெரிந்ததே. அத்துடன் இக்கட்டிடத்தில் தங்களுக்கு வசிக்க இடமில்லையென்று வைத்தியர்கள் [illegible] வந்தமாக குடிபுகுந்தது மன்றி, இற்றை வரை அங்கே தொடர்ந்து வசித்து வருவதும் எல்லோரும் அறிந்ததே. அங்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தகுந்த முறையில் தீர்த்து வைப்பதை விட்டு விட்டு அக்கல்லூரிக்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களை இடம் பெயர்த்து மட்டக்களப்புக்கு கொண்டுவருவது நீதியா? சிங்கள மாணவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டிய காரணத்திற்காக அத்தனை சதவிகிதத்தால் தமிழ் மாணவர்களுக்குரிய இடத்தை இல்லாமல் செய்வது தமிழ் மக்களுக்குக்காட்டும் நியாயமா?

தமிழ் பேசும் மக்களுக்கென்று சொல்லப்பட்ட மட்டக்களப்புத் தாதிமார்களின் பயிற்சி நிலையத்திற்கு (தமிழருக்கென்றுள்ளஇரண்டாவது கல்லூரி இதுவே). மார்கழி மாதத்தில் 32 சிங்கள மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். இவர்கள் பதுளையில் அமைக்கப்பட்ட கல்லூரிக்கென்று அனுமதிபெற்றிருந்தவர்கள்.

### பயிற்சிநிலையத்திற்கு அனுமதி

ஐப்பசி முடிவில் 32 தமிழ் மாணவர்களும் அனுமதிக்கப்படுவர். இவர்களில் 24 பேர் ஏற்கனவே யாழ்ப்பாணத்திலுள்ளனர். இவர்கள் கிழக்கிலங்கையைசேர்ந்தவர்கள். எனவே தமிழ் பேசும் மக்களுக்கென்று அமைக்கப்பட்ட இக்கல்லூரியில் அனுமதி பெறும் புது மாணவர்கள் ஆக எண்மரே. ஏனிந்தப் பாரபட்சம்? இவர்களுக்கென்று செலவிடப்படும் பணம் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்கென்று ஒதுக்கிடு செய்யப்பட்ட 2 கோடிரூபாய் ஆனல் பயன்பெறுபவரோ வேறுதொகுதியை சேர்ந்தவர்கள்! இது நியாயமா?

இவற்றை எடுத்துக்கூறுவதால் சிலர் எம்மை இனவாதிகள் என்று கூறக்கூடும். ஆனல் உண்மை அதுவல்ல. பல இனத்தவரையும் அன்னியோன்னியமாகவாழ அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு அரசின் இச்செய்கை குதர்க்கம் விளைவிப்பது போலுள்ளது. அண்மையில் பிரகடனம் செய்யப்பட்ட "இரண்டாவது குடியரசுத் திட்டத்தில்" தரப்பட்டுள்ள இன சமத்துவ உத்தரவாதத்திற்கும் நேர்முரணக இருக்கிறது.

ஒரு கையால் சொடுப்பதை மறுகையால் பறிக்க வேண்டாமென்று பணிவுடன் அரசை நாம் கேட்டுக்கொள்கிறோம்.

—இயேசுசபை யோ. யோசேப் மேரி அடிகள்

இயேசு சபை இல்லம்
20 மத்திய வீதி
மட்டக்களப்பு.

## யூனியரின் கேள்வியும் தேவநாயகத்தின் பதிலும்!

*"அரசியலமைப்பைத் தயாரிப்பதற்கு கூட்டணியினர் அரசுக்கு உதவினர்; பூரண ஒத்துழைப்பு வழங்கினர்; இதை மறுக்க முடியுமா?"*

*—யூனியரின் கேள்வி. (வீரகேசரி 6-10-78)*

*அரசியல் சட்டத்தெரிவுக்குழுவில் தமிழர் விடுதலை கூட்டணியினர் பங்குபற்ற மறுத்து விட்டனர். பங்குபற்றியிருந்தால் மட்டுமே குற்றம் குறைகளைக் கூற கூட்டணியினருக்கு உரிமையுண்டு.*

*—அமைச்சர் தேவநாயகம். (தேசிய அரசுப்பேரவையில் 5-10-78)*

## கல்மலை பிள்ளையார் கோவிலை ஆக்கிரமிக்க பிக்கு சூழ்ச்சி!

### இதற்கு வவுனியா அரச அதிபரும் உடந்தையா?

பௌத்த பிக்கு ஒருவர் ஆட்சேபனை கிளப்பியதையடுத்து வவுனியாப் பட்டின எல்லையிலுள்ள சமளங்குளம் என்னும் கிராமத்தின் கல்மலையில் அமைந்துள்ள பழமைவாய்ந்த பிள்ளையார் ஆலயத்திருத்த வேலை வவுனியா அரசாங்க அதிபரால் தடைசெய்யப்பட்டுள்ளது.

இதுபற்றிய பிரச்சினையைத்தீர்ப்பதற்கு வவுனியா பா. உ. திரு. தா. சிவசிதம்பரம் சில நடவடிக்கைகளை மேற்கொள்கிருரெனத் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றிய விபரம் வருமாறு:—

மேற்படி ஆலயம், வன்னியர் ஆட்சிக்காலத்திற்கு முன் தொடங்கியே வழங்கி வந்ததற்கும், இடைக்காலத்தில் போர்த்துக்கேய, ஒல்லாந்தரினல் சிதைவுக்குள்ளாகியதற்கும் ஆதாரங்கள் பல உண்டென்றும், தொடர்ச்சியாக ஒரு கற்சிலையை வைத்து வணங்கிவந்த சைவ மக்கள், 1972ம் ஆண்டு தொடங்கி ஆலயப் புனருத்தாரணவேலையைத்தொடங்கியுள்ளார்கள் என்றும்தெரிவிக்கப்பட்டது.

மூலஸ்தானமும், தரிசன மண்டபமும்அமைக்கப்படும் இவ்வேளையில், மடுக்கந்தை பௌத்த பிக்குவினுடைய முறையீட்டின் காரணமாக அரசாங்க அதிபர் ஆலயத் திருபபணிவேலையை நிறுத்தியுள்ளார்.

எல்லப்பர்மருதங்குளம், சமளங்குளம், பேய்கூப்பிட்டான்குளம், காயாங்குளம், கோவில்குளம், கோவில் புதுக்குளம், முருகனூர், இத்திக்குளம் ஆகிய ஊர்களுக்கு மையமாக அமைந்துள்ள இந்தச் சைவ ஆலயத்தை இன்று மடுக்கந்தை பௌத்த பிக்கு, தமக்குரிய ஆலயமென உரிமைகோருகிருர்:

வவுனியா பா. உ. குறித்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏற்ற நடவடிக்கை மேற்கொள்கிருர். குறித்த ஆலயம், பழம்பெருமை வாய்ந்த சைவ ஆலயம்என்பதற்குச் சரித்திர ஆதாரங்கள் திரட்டப்படுகின்றன;

## மன்னூர் பா.உ சூசைதாசன் உறுதி

"மாவட்ட அமைச்சர் பதவிகளை உருவாக்கி அதன் மூலம் எங்கள் உயிருடன் கலந்த ஒரே இலட்சியமான தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்தை முறியடித்துவிடவாமென்று அரசாங்கம் பகற்கனவு காண்கிறது. அது ஒருபோதுமே கைகூடப்போவது இல்லை. நமது இலட்சியத்தையடையும்வரை நாம் போராடியே தீருவோம். தமிழீழ விடுதலை எமது உரிமை. இந்த உரிமையை நாம் நிலைநாட்டுவதை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்திவிடமுடியாது."

—இவ்வாறு மன்னூர் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற கலைமகள் விழாவில் பேசிய மன்னூர் பா. உ. திரு. பி. எஸ். சூசைதாசன் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

"தமிழ்பேசும்மக்கள் எந்த இலட்சியத்துக்காகஎம்மைத் தெரிவுசெய்து பேரவைக்கு அனுப்பிவைத்தார்களோ, அந்தத் தமிழீழ இலட்சியத்தை நிறைவேற்ற நாம் அந்தரங்க சுத்தியுடன் உழைப்போம். இதில் யாருக்கும் சந்தேகம் ஏற்படவேண்டியதில்லை."

## தமிழ்மறை மனனப்போட்டி

தமிழ் மறையாம் திருக்குறளை அனைவரும் பாடமாக்கி வாழ்க்கை வழிகாட்டியாக பின்பற்றுவதற்கு ஊக்கமளிக்கும் முகமாக திருக்குறள் மனனப்போட்டிகளை அகில இலங்கை அடிப்படையில் தமிழ் மறைக்கழகம் நடத்துவதற்கு முன்வந்துள்ளது. தொடக்கப்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு, எனும் 4 பிரிவுகளாக இப்போட்டி நடைபெறவுள்ளது. இதன் விபரங்களை, தி. சிவசாமி செயலாளர் தமிழ் மறைக்கழகம், வேலணை எனும் முகவரிக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத்தில் தமிழுக்கு தொடர்ந்தும் 'அடைப்புக்குறி' தானு?

தார்மீக ஆட்சியிலும் நாடாளுமன்றத்தில் தமிழுக்கு தொடர்ந்து அடைப்புக்குறிதான் கிடைக்கப்போகிறதா? என்ற கேள்வி நாடாளுமன்ற வட்டாரங்களில் இப்போது எழுந்துள்ளது.

தேசிய பேரவையின் நிகழ்ச்சிநிரலின் தமிழ்மொழி பெயர்ப்புக்களை அடைப்புக்குறிக்குள் அச்சிடுவது புதிய அரசியல் சட்டவிதிகளுக்கு முரண்பட்டதென்றும், ஆகவே தமிழுக்கு அடைப்புககுறிபோடும் முறை அகற்றப்படவேண்டுமென்றும் பேரவையில் பதில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் முன்பு தெரிவித்த கருத்தினைத் தொடர்ந்து அடைப்புக்குறி அகற்றப்பட்டு இம்முறை நிகழ்ச்சிநிரல் அச்சிடப்பட்டிருந்தது.

தமிழுக்கு இதுவரை இருந்துவந்த அடைப்புக்குறி அகற்றப்பட்டதை ஆட்சேபித்து அரசாங்கக்கட்சியைச் சேர்ந்த அப்புத்தளை பா. உ. திரு. ஜே. எம். லொக்கு பண்டார தேசிய பேரவையில் ஒழுங்குப்பிரச்சினையொன்றை எழுப்பியிருக்கிருர்.

நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலின் தமிழ்மொழி பெயர்ப்பு முன்னர் அடைப்புக்குறிக்குள் அச்சிடப்பட்டது என்றும்— இப்போது இந்த முறை மாற்றப்பட்டிருப்பதாகவும்—இது சபையின் நிரந்தர விதிகளுக்கு முரண்பட்டதென்றும்—பதில் எதிர்க்கட்சித்தலைவர் சபையில் எழுப்பிய உரிமைப் பிரச்சினையொன்றை அடுத்தே இந்தமாற்றம் ஏற்பட்டிருப்பதாகவும்— புதிய அரசியல்சட்டம், சிங்களத்தையும் தமிழையும் தேசியமொழிகளாக அங்கீகரித்துள்ளபோதிலும், உத்தியோகமொழியில் எந்தவிதமாற்றமும் செய்யப்படவில்லையென்று ஜனதிபதி தமக்கு வாக்குறுதி தந்திருப்பதாகவும்—புதிய ஏற்பாடுகள் எதுவும்செய்யப்படாததால் சபையின் தற்போதைய நிரந்தரவிதிகளையே பின்பற்றவேண்டுமென்றும்—முன்பு அச்சிட்டதுபோல தமிழை அடைப்புக் குறிக்குள்ளேயே அச்சிடப்படவேண்டுமென்றும் திரு. லொக்கு பண்டார ஒழுங்குப்பிரச்சினை கிளப்பினுர்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், சபையின்நிரந்தர விதிகளுக்கு மாருக எதுவும் செய்யப்படமாட்டாதென்றும், நிரந்தரக்கட்டளைகளை மாற்றும்வரை நிகழ்ச்சி நிரலில் மாற்றம் செய்ய முடியாதென்றும் சபாநாயகர் தீர்ப்பு அளித்தார்.

திரு. மு. சிவசிதம்பரம் பா. உ. இதுசம்பந்தமாக விடுத்த அறிக்கையில், ''கட்சி அடிப்படையிலன்றி ஒற்றுமையின் அடிப்படையில் இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டும்; எல்லாக்கட்சித் தலைவர்களையும் அழைத்துப்பேசி இது பற்றி விவாதித்து முடிவு செய்யுங்கள்'' என்றுவேண்டுகோள்விடுத்துள்ளார்.

## கலப்புத் திருமணம் செய்யத் தயார் பெண்தரத் தயாரா?

### கூட்டணி பொலிகண்டிக் கிளை கேள்வி

''சாதியொழிப்புப்பற்றிப் பேசும் கூட்டணியினர் கலப்புத் திருமணம் செய்யத் தயாரா? என்று வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்த ஆளுங்கட்சி அடிவருடியொருவர் 14-10-78 தினகரனில் விடுத்திருந்த சவாலுக்கு கூட்டணியின் பொலிகண்டிக்கிளையினர் பதிலளித்துள்ளனர்.

''பொலிகண்டி தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளையினராகிய நாம் சாதி ஒழிப்புக்காக கலப்புத் திருமணம் செய்ய ஆயத்தமாயுள்ளோம். ஆனல் பெண்தரத் தயாராக இருந்தால் உடனடியாக எம்முடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டுகிருேம்''

— இவ்வாறு பொலிகண்டிக்கிளையின் சார்பில் அதன் தலைவர் ச.கணேசலிங்கமும் செயலாளர் சி. சிவபாலசிங்கமும் கூட்டாக கையொப்பமிட்டு பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

## இனக்கொலை---

—1ம் பக்கத் தொடர்

முகம்மதுவும், இந்தப் பிரச்சினையிலேயே தமக்கும் கருணுநிதிக்கும் கருத்துவேற்றுமை ஏற்பட்டு வளர்ந்ததாகக்கூறியிருந்தார்.

இவர்கள் அனைவரும், இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. ஆரிடம் ஜெயவர்த்தனவின்வரவேற்பில் பங்குபற்ற வேண்டாமென்று வற்புறுத்தியிருப்பதாக நமது சென்னை நிருபர் அறிவிக்கிருர்—

''அன்றுகருணுநிதியைக் கண்டித்த நாம், இன்று அதே பிழையை விடக்கூடாது: இலங்கையில் தமிழ் இன ஒழிப்பு நடவடிக்கைகளில் ஜே. ஆர். அரசு ஈடுபட்டு வருகிறது; தமிழ் நாட்டில் பலவந்தமாக பல லட்சக்கணக்கான வட இந்தியர்களை இந்திய அரசே கொண்டு வந்து குடியேற்றி தமிழ் நாட்டில் தமிழர்களையே சிறுபான்மையாக்க முயற்சித்தால், நமது உணர்வு எப்படி இருக்கும்? இது தான் இலங்கையில் நடைபெறுகிறது. இலங்கையில் ஜே. ஆர். அரசாங்கமே திட்டமிட்டுதமிழர் பெருவாரியாக வாழும் பகுதிகளில் சிங்களவர்களைப் பெருமளவில் கொண்டு சென்று குடியேற்றி ஈழத்தமிழர் தாயகத்திலேயே அவர்களை சிறுபான்மையினராக்க முயற்சிசெய்து வருகிறது, இப்படி தமிழினக் கொலையில் ஈடுபட்டுவரும் ஆட்சியின் தலைவருக்கு நாலரைக் கோடி தமிழ் நாட்டு மக்களின் தலைவரான எம்.ஜி. ஆர். எப்படி வரவேற்பு அளிக்கலாம்? இப்படிச் செய்வது தமது வாழ்வுக்காகப் போராடும் ஈழத்தின் 40 இலட்சம் தமிழருக்கும் செய்யும்துரோகமாக அமையுமல்லவா?''

என்ற கருத்து தமிழ் நாடு அண்ணுதிமுக வட்டாரத்தில் ஓங்கி நிற்கிறது.

சிறிமாவோ அம்மையாரை கருணுநிதி அன்று வரவேற்றதைத் தவறு என்று கண்டித்தவர்களே இன்று தமிழ்நாட்டின் ஆட்சிப்பொறுப்பில் இருப்பதால், கருணுநிதி மீது தாம் சுமத்திய குற்றச்சாட்டை மற்றவர்கள் தம்மீது சுமத்தும் சூழ்நிலையை தோற்றுவிக்க மாட்டார்கள் — இனக்கொலை நாயகரான ஜே. ஆர். அவர்களுக்கு அண்ணு திமுக ஆட்சியினர் வரவேற்பு அளிக்கவோ அல்லது வரவேற்பில் பங்குபற்றவோ மாட்டார்கள் என்று தமிழக அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

## தமிழீழ முதல்..

—1-ம பக்கத் தொடர்

கையை எதிர்நோக்கிபார்த்திருக்கிறது.

லண்டனில் தமிழீழவிடுதலைக்கு ஆதரவு திரட்டி— ஜமேய்க்கா மாநாட்டில் தமிழ்ஈழவிடுதலை முரசொலித்து— அமெரிக்கநாட்டில் சிங்கள சிறீலங்காவின் இன ஒடுக்குமுறையை அம்பலப்படுத்தி— தமிழ் அகதிகள் மறுவாழ்வு நிதிக்கு பணம் திரட்டி— அமெரிக்காவிலுள்ள உலகவங்கிபோன்ற பல்வேறு அமைப்புக்களின் தலைவர்களையும் சந்தித்து, தமிழினத்தின் அபாய நிலையை எடுத்துக் கூறி— கனடாசென்று மாவலி மதுறு ஓயா த்திட்டத்தின் பின்னணியிலுள்ள இன ஒழிப்புக்கொள்கையை அம்பலப்படுத்திவிட்டு— தற்போது மறுபடியும் லண்டனுக்குத் திரும்பியுள்ள தலைவர் அமிர்தலிங்கம் அவர்களும் அவரது துணைவியாரும், நவம்பர் முதல்வாரத்தில் லண்டனிலிருந்து இந்தியாவருகின்றனர்.

அமெரிக்க அரசாங்கத்துறையின் மனிதஉரிமைப் பிரிவினரையும்— அமெரிக்க செனட் உறுப்பினர்களையும்- அயல்நாட்டுறவுக்குழு உறுப்பினர்களையும்— உலகவங்கி அதிகாரிகளையும்— அனைத்து அயல்நாட்டு உதவிக்கான அமெரிக்கத்திட்டப் பணிப்பாளரையும் சந்தித்து, தமிழினத்தை அழித்தொழிக்கும் சிறீலங்கா அரசுக்கு எவ்வித உதவியையும் வழங்கக் கூடாதென திரு. அமிர்தலிங்கம் வேண்டுகோள்விடுத்தார்.

இந்தியத் தமிழ்நாட்டுக்கு வருகைதரும் தலைவர் திரு. அமிர்தலிங்கத்தையும் திருமதி அமிர்தலிங்கம் அவர்களையும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கட்சித்தலைவர்களும் கட்சிசார்பின்றி வரவேற்க இருக்கின்றனர். அதிமுக, திமுக, இந்திரா காங்கிரஸ், ஜனதா, கம்யூனிஸ்ட் தமிழரசுக்கழகம் ஆசியவற்றின் தலைவர்களை திரு. அமிர்தலிங்கம் சந்திப்பார். திரு. அமிர்தலிங்கத்துக்கு அளிக்கப்படும் வரவேற்பில் தமிழக ஆளுங்கட்சித் தலைவரும் தமிழகமுதல்வருமான திரு. எம். ஜி. ஆர். அவர்களும், தமிழக எதிர்க்கட்சித்தலைவரான கலைஞர் மு. கருணுநிதி அவர்களும் கலந்துகொள்ள விருக்கின்றனர்.

தமிழ் நாட்டு அளவில் தமிழகக்கட்சிகளிடையே வேறுபாடுகள் போட்டாபோட்டிகள் இருந்தாலும் தமிழ் ஈழ [illegible] கட்சிபேதங்களை மறந்து தமிழகக்கட்சிகள் ஒன்றுபட்டுக்குரல்கொடுக்கவேண்டுமெனத் திரு. அமிர்தலிங்கம் இங்கு வேண்டுகோள் விடுப்பார் என்று தெரிகிறது.

உலகத்தமிழ் இளைஞர் பேரவைத்தலைவர் இரா. சனர்த்தனம் எம். ஏ உலகத்தமிழ் பண்பாட்டியக்க இந்தியக்கிளையின் செயலாளர் செல்வி. க. தன்மானும், குடிபெயர்ந்தோர் நலவுரிமைச் சங்கத்தலைவர் திரு. ஏ. எஸ். மணவைத்தம்பி, திரு. தமிழ்மன்னன், செஞ்சி ராமச்சந்திரன் எம. எல். ஏ. அருகோபாலன், தென்மொழி பெருஞ்சித்திரனர், தமிழக—ஈழ நட்புறவுக்கழகச் செயலாளர் திரு. ந. அரணமுறுவல், ஆகியோர் வரவேற்புஏற்பாடுகளில் தீவிர கவனம் செலுத்திவருகின்றனர்.

தலைவர் அமிர் வரவேற்பு சம்பந்தமாக, உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கச் செயலாளர் செல்வி. க. தன்மானம் 'முரசொலி' வாயிலாக பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளார்—

''தமிழ் ஈழ விடுதலைக்கு ஆதரவு திரட்டுவதற்காக உலகின் பல்வேறுநாடுகளில் சுற்றுப்பயணம் செய்துவரும் தமிழ் ஈழ விடுதலைக்கூட்டணித்தலைவரும் இலங்கை நாடாளுமன்ற எதிர்க்கட்சித்தலைவருமான நாவலர் அமிர்தலிங்கம் பா. உ. அவர்களும், விடுதலை வேங்கை திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களும் நவம்பர் திங்கள் முதல்வாரத்தில் தமிழகம் வரவிருக்கின்றனர். அவர்களை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சிறப்பாக வரவேற்கவும், சென்னையில் பிரமாண்டமான வரவேற்பு, பாராட்டுக்கூட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. தொடர்ந்து கோவை, திருச்சி, மதுரை நாகர் கோவில் ஆகிய இடங்களிலும் வரவேற்பு பாராட்டு கூட்டங்களுக்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க இந்தியக்கிளை ஏற்பாடுசெய்துவருகின்றது.''

## இராணுவ வீரர்...

—1-ம் பக்க தொட

ரான கோப்ரல் ஜயசேகரா விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

உயர் நீதிமன்றத்தின் உத்தரவின்மீது மேற்படி மரண விசாரணை சம்பந்தமான தனது தீர்ப்பை 17.10.78ல் முல்லைத்தீவு நீதவான் வழங்கினுர். மேற்படி துப்பாக்கிச் சூட்டு' மரணம் கொலை' என நீதிவான் தீர்ப்பளித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து சந்தேக நபரான கோப்ரல் ஜெயசேகரா மீது சட்டமா அதிபதிவழக்குத் தொடருவாரா என்று பொதுமக்கள் மத்தியில் கேட்கப்படுகிறது.

முன்னைய அரசாங்கம், பராசா படுகொலையின்போது சம்பந்தப்பட்ட பொலிசார் மீது வழக்குத் தொடராது சம்பந்தப்பட்ட பொலிசாருக்குப் பதவி உயர்வு வழங்கியது; இன்றைய தார்மீக அரசும், முன்னைய அரசைப் பின்பற்றப் போகிறதா அல்லது நீதிக்குத்தலைவணங்கப் போகிறதா என்பதே இப்போது விடைகாணப்படவேண்டிய கேள்வியாகும்.

## ஆபீஸ் பையன் கேட்கிறுன்!



''நம்மட சுயாட்சிக் கழகத் தலைவர் நவரத்தினம் ஐயா அவர்கள் இப்பத்தான் தூக்கத்தால விழிச்சிருக்கார் போல இருக்கு— மக்கள் ஆதரவளித்தால் ஒரே வருடத்தில் தமிழ் ஈழத்தைப் பெற்றுத்தரத் தாம் தயாரென இப்போது கூறியிருக்கிருர்! ஒரு வருடமென்ன, ஒரு நாளில தமிழ் ஈழம்யார் கொண்டு வந்தாலும் வேண்டாமென்று கூறப் போறம்? ஆர் குத்தியும் அரிசியானல் போதும்— நவரத்தினம் ஐயா முதலில் போராட்டத்தை தொடங்கட்டும்! கறுப்புக்கோட்டை கழட்டிவிட்டுச் களத்தில் குதிக்கட்டும்—அப்போதுதான்மக்கள் ஆதரவளிக்கிருர்களா இல்லையா என்பது தெரியும்!''


## இளைஞர் குரல் வெளிவருகிறது!

உணர்ச்சிவசப்படுத்த அல்ல — உணர்வுவழிப்படுத்த—குற்றம் கூறவல்ல! கொற்றம் காக்க—

நற்றமிழ் இளைஞரின் இதயக்குரலாக வெளிவருகிறது. நேரம் பார்த்துச் சோரம் போக்கப்படியுங்கள். இளைஞர் குரல் விலை சதம் 60. 29 - 10 - 78 இல் எங்கும் கிடைக்கும்.




திருப்திகரமான சலவைக்கு மில்க்வைற் நீல சோப் வாங்கி உபயோகியுங்கள்

விலை 60 சதம் மட்டுமே மேலுறைகளை கவனித்து வாங்குங்கள்.

மில்க்வைற்— யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1978ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25ம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org